நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உணவு ஏற்றுமதியில் லாபம் உள்ளதா?**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 11 Oct 2011 01:40:17 AM IST

மந்தியப் பொருளாதார வரலாற்றை இருபதாண்டுக்கு முன்புள்ள சூழ்நிலையுடன் தொடர்பு செய்து கவனித்தோமானால், நமது நெருக்கடி - அமெரிக்கா கூறுவதற்கெல்லாம் ஆமாம் போட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நிலை, வெளிச்சமாகும். 1990-களில் நரசிம்ம ராவ் பிரதமராயிருந்தபோது மன்மோகன் சிங் நிதியமைச்சர், சிதம்பரம் துணை நிதியமைச்சர், இன்று திட்டக்கமிஷன் தலைவராயுள்ள சர்தார்ஜி அலுவாலியா அன்று நிதித்துறைச் செயலர். அப்போதுதான் உலகமயமாதல் உருவானது. தனியார்மயம், பொதுத்துறைப் புறக்கணிப்பு எல்லாம் ஏற்பட்டது.

டங்கல் திட்டம், காப்புரிமைச் சட்டம், உலக வர்த்தக அமைப்பு, ஏற்றுமதி - இறக்குமதி வரிக்குறைப்பு எல்லாம் ஏற்கப்பட்டன. இன்று 2ஜி ஊழலில் சிதம்பர ரகசியம் அம்பலமானாலும் அதை இருட்டடிப்புச் செய்வதில் மன்மோகன் காட்டும் அக்கறை பழைய விசுவாசத்தினாலோ என்னவோ - அது போகட்டும்.

உலகமயமாதலில் அதிக ஆதாயம் வடக்கு நாடுகளுக்குத்தான் என்பது இதுநாள்வரை வடக்கு பெற்ற வளர்ச்சியுடன் நமது நிலையை ஒப்பிட்டால் புலனாகும். அவர்கள் எட்டிப்பிடித்த இடத்துக்கெல்லாம் நாம் போக முடியும் என்று தோன்றவில்லை. வடக்கு நாடுகளில் தோன்றியுள்ள பொதுக்கடன் பிரச்னைகளைத் தெற்கு நாடுகளின் அங்காடிகள் தீர்த்துவிடும். வடக்கு நாடுகளின் வளர்ச்சி உலகமயமாதல் விளைவால் 60 மதிப்பெண்ணிலிருந்து நூறைத் தொட்டுப் பின்னர் 90-க்கு இறங்கியிருக்கலாம். தெற்கு நாடுகள் வளர்ச்சியில் பெயில் மார்க் வாங்கியவர்கள். அப்போது 25 மதிப்பெண் என்றால் இப்போது 30 மதிப்பெண்கள் - என்ற அளவில் வளர்ச்சி. பெயில் மார்க்கில் முன்னேற்றம் உண்டு. வளர்ச்சியில் பயனடைந்தோர் இந்தியாவில் நிறைய உண்டு.

உலக வங்கிப் பணத்தைச் சுருட்டியவர்கள் சுவிஸ் வங்கியில் ரகசியக் கணக்கில் டெபாசிட் செய்துள்ளனர். உலக வங்கிக் கடனுக்கு அரசு வட்டி செலுத்த, முதலை விழுங்கிய முதலைகள் பட்டினியில் வாடும் பழங்குடிக்குக் கண்ணீர் வடிக்கலாம். இப்படி சுவிஸ் வங்கியில் டெபாசிட்டான சுமார் 65 லட்சம் கோடி இந்திய ரூபாய் ஜி.டி.பி. கணக்கில் வரவில்லை. இப்படிக் கணக்குக் காட்டாமல் சுவிட்சர்லாந்துக்கு ரூபாய் ஏற்றுமதி போதாதா? யூரோ நாடுகளுடன் தடையில்லா உணவு வர்த்தக ஒப்பந்தத்துக்கும் இந்தியா கையெழுத்துப் போட்டுள்ளது. உணவு

ஏற்றுமதியைவிட இந்தியாவின் உணவு இறக்குமதி அதிகம். கோதுமை இறக்குமதியும் உண்டு. சமையல் எண்ணெய், பருப்பு இறக்குமதியும் உண்டு.

உள்நாட்டில் கோதுமைத் தேவை இருந்தாலும்கூட, கொள்முதல் செய்த கோதுமையைக் கொட்டிவைக்க இடமில்லாமல் 20 லட்சம் டன்வரை ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு வாங்குவோர் சந்தை இல்லையென்பதாகவும், சந்தைவிலை குறைவதாகவும் பேசப்படுகிறது. எப்போதுமே சர்வதேசச் சந்தையில் விலை குறையும்போது நாம் ஏற்றுமதி செய்வது புதிய விஷயம் இல்லை.

உலகமயமாதலில் தொடங்கினோம். உணவு ஏற்றுமதிக்கும் உலகமயமாதலுக்கும் உறவு உண்டு. உலக உணவு வர்த்தகத்தில் உலக வர்த்தக அமைப்பு ஏராளமான விதி ஒழுங்குமுறைகளை வரையறுத்துள்ளது. அவை இந்தியாவுக்கு நன்மை தராமல் நஷ்டமேற்படுத்துகின்றன.

இந்திய விவசாயத்தையும் உணவு ஏற்றுமதியையும் கொல்வதற்காகவே காப்புரிமைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒருபக்கம் இந்தியா - யு.எஸ். வேளாண் தொழில்நுட்ப ஒப்பந்தம் இந்திய விவசாயத்தை மான்செண்டோவுக்கு அடிமைப்படுத்திய கதை ஒருபக்கம் இருக்கட்டும். இந்தக் கட்டுரையில் யூரோவின் உணவுக் கொள்ளையைக் கவனிப்போம். ஐரோப்பிய நாட்டுடன் இந்தியா செய்துள்ள ஒப்பந்தம் உணவு ஏற்றுமதி - இறக்குமதி பற்றியதும்கூட. இதுபற்றி யோசிக்கும்போது ஒரு நெருடல். பசியும் பஞ்சமும் மலிந்த நாட்டில் உணவு ஏற்றுமதி பற்றிப் பேசும் அதேநேரத்தில், உணவுக்கு உத்தரவாதச் சட்ட மசோதா நாடாளுமன்றத் தேர்வுக் குழுவுக்குச் சென்றுள்ளதை ஊடகங்கள் தெரிவிப்பதும், அதைப் பற்றி நிபுணர்கள் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுவதும் நல்ல நகைச்சுவை.

""தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதி இயற்றிய உணவு உத்தரவாதச் சட்டத்தைவிட அரசுச் சட்டம் உயர்வானதா என்ன? இந்த அரசுச் சட்டம் வெளிவந்த பின்னர் ஓர் ஏழைப் பழங்குடி பசியால் உயிர்துறந்துவிட்டால் உணவு அமைச்சர் பதவி விலகுவாரா? இல்லை, இந்தச் சட்டம் வெளிவந்த பின்னர், ஒவ்வொரு குடிமகனுக்கும் சத்தான சமச்சீர் உணவு கிட்டுமா? இது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஐரோப்பிய நாடுகளுடன் நாம் செய்துகொண்டுள்ள தடையில்லா உணவு வர்த்தக ஒப்பந்தம் என்னாவது?

இன்று யூரோ நாடுகளுடன் நாம் கொண்டுள்ள தடையில்லா உணவு ஏற்றுமதி வர்த்தகத்தில் நமது கச்சாப் பொருள் ஏற்றுமதி 5 சதவீத நிலை - 2020-ல் 17 சதவீதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தானிய வகை ஏற்றுமதியை 24 சதவீதமாக உயர்த்தவும், இறைச்சி - பால் பொருள் ஏற்றுமதியை 10 சதவீதமாகவும் - அக்ரோஃபுட் வரிசையில் 6 சதவீதம் உயர்த்தவும் திட்டம் உள்ளது.

யூரோ நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பல பொருள்களுடன் வேளாண் விளைபொருள் உணவு வகையைக் கணக்கில்கொண்டால் நமது ஏற்றுமதி மதிப்பைவிட இறக்குமதி மதிப்பு

அதிகமாயுள்ளதால் யூரோ நாட்டு உணவு வர்த்தக ஒப்பந்தத்தின் வாயிலாக சுமார் 50 மில்லியன் டாலர் வர்த்தகப் பற்றாக்குறை ஏற்படும் என்பது நிபுணர்களின் கருத்து.

இந்த ஒப்பந்தத்தால் விவசாயிகளுக்கு மட்டுமல்ல, விளைபொருள்களிலிருந்து பக்குவம் செய்த உணவு உற்பத்தியாளர்களும் - குறிப்பாக பால்பொருள், இறைச்சி, கோதுமை, சர்க்கரை, இனிப்புப்பண்டத் தொழில், எண்ணெய்வித்து, காபி - தேயிலை - மீன் ஏற்றுமதி நஷ்டமாகும்.

இன்றைய நிலையில் நமது வேளாண் ஏற்றுமதி ஐரோப்பிய இறக்குமதிப் பொருள்களில் 3 சதவீதமே. இதற்குக் காரணமாகக் கூறப்படுவது ஏற்றுமதி வரிகள் - பொருளைப் பொருத்து 32 சதவீதத்திலிருந்து 115 சதவீதம்வரை சுமத்தப்பட்டுள்ளன. ஐரோப்பிய அங்காடிகளுக்கு என்றால் 14 சதவீதம். பழங்கள், காய்கறிகளுக்கு மட்டுமே வரிவிலக்கு உள்ளது என்றாலும் 22 சதவீதம் வரை வசூல் உண்டு. சமையல் எண்ணெய்க்கு 73 சதம் வரி. ஆனால், ஐரோப்பிய உணவு ஏற்றுமதித் தடையில்லா ஒப்பந்தத்தில் ஏற்றுமதி வரி வருமானத்தை நாம் இழக்க வேண்டியுள்ளது. இவைதவிர, தொழில்நுட்ப ரீதியான பிரச்னைகளும் உண்டு.

அதேசமயம், ஐரோப்பிய நாடுகளில் ஏற்றுமதி வரிகள் குறைவு என்றாலும் விவசாயப் பொருள் உற்பத்திக்கான மானியம் மிக அதிகம். ஐரோப்பிய நாடுகளில் விவசாயிகளைக் காப்பாற்ற எடுக்கப்படும் பல நடவடிக்கைகளில் உள்ளூர் அங்காடி வரத்தும் - ஏற்றுமதி அங்காடி வரத்தும் வளம்பெற நிறையச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் டாட்டாவுக்கும் அம்பானிக்கும் வேறு பல பன்னாட்டு நிறுவனக் கோட்டீஸ்வரர்களுக்கும் வழங்கப்படும் சலுகைகள் விவசாயிகளுக்கு இல்லை. தொழில் முதலைகளுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளால் உருவாகும் கறுப்புப்பணம் ஐரோப்பாவுக்கே (சுவிஸ் வங்கி) ஏற்றுமதியாகும்போது உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நியாயமாக வழங்க வேண்டிய வெள்ளைப்பணம் கிட்டுவதே சிக்கலாகியுள்ளது. இப்படி விவசாயிகளின் வயிற்றிலடித்து வாங்கப்படும் பொருளை ஏற்றுமதி செய்தும் நாட்டுக்கு ஏதும் லாபம் உண்டா? அந்த வழியிலும் வெற்றி இல்லை. நமது வருமானத்தை ஐரோப்பாவுக்கு அடகு வைத்துவிட்டு நாம் பெறப்போவது சீமைச் சாராயம். அருமையான ஸ்காட்ச் விஸ்கி, சீமை ஓயின், சீமை பிராந்திக்கு அதிக விலை கொடுத்து வாங்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

காந்தி பிறந்த நாட்டில் உள்ளூரிலேயே கள்ளச்சாராயமும் டாஸ்மாக் சாராயமும் கடலென ஓடும்போது- கறுப்புப்பண வேந்தர்களுக்கு வசதியாக சீமைச் சாராயம் வழங்கவா நாம் தேச விடுதலை பெற்றோம்?

யூரோ தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் பொதுவான விவசாயக் கொள்கைகள், ஏற்றுமதி வரி நீக்கம் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு கவனித்தால் தெற்கு நாடுகளின் தொடர் வளர்ச்சி என்ற போலியான பேச்சுள்ள யூரோ ஒப்பந்தம் இந்தியாவைப் படுகுழியில் தள்ளும்.

இன்னமும் இந்தியாவில் உணவு நெருக்கடி தீர்ந்தபாடில்லை. உணவு விலைப் பணவீக்கம் தணியவில்லை. ஒரே சீரான விநியோகம் இல்லை. கோதுமைக்கு உள்ளூர்த் தேவை உள்ளது.

ரேஷனில் 5 கிலோவுக்கு மேல் வழங்குவது இல்லை. விநியோகக் குறைபாட்டால் சரக்குத் தேக்கமே தவிர ஏற்றுமதிக்குரிய உபரி என்பது கிடையாது. உணவு ஏற்றுமதியை நஷ்டத்திற்குச் செய்வதைவிட இலவச விநியோகம் தேவலாம். திடீரென்று ஓராண்டு நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தம் வருமானால் ஐரோப்பா தடைகளைக் கொண்டுவந்து கொள்ளை லாபம் அடிக்கும் என்பது கடந்த கால அனுபவம். இந்தியாவில் ஏற்றுமதி- இறக்குமதி கொள்கை வகுப்போர்க்கும் விவசாயக் கொள்கை வகுப்போர்க்கும் அல்லது விவசாய சங்கத் தலைவர்கள் அல்லது மக்கள் நலன் விரும்பும் சிவில் சொசைட்டி பிரதிநிதிகள், மாநில அரசுக்கும் பேச்சுவார்த்தை இல்லாமலேயே தான்தோன்றி முடிவுகளும் வர்த்தகப் பிரதிநிதி கைக்குலுக்கல்களும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன.

உலகமயமாதல் விளைவால் உலக ஏற்றுமதியில் பங்கேற்றுள்ள இந்தியா வேளாண் ஏற்றுமதி மூலம் பெறக்கூடிய குறைவான அன்னியச் செலாவணி கொண்டு அதிக விலையில் நமக்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்யலாம். விவசாய உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர்கள் இல்லை. சமீபத்தில் ஊடகச் செய்தி எதுவெனில், இந்தியத் தேங்காய் ஏற்றுமதி பற்றியது. இலங்கை, பிலிப்பின்ஸ் நாடுகளில் தேங்காய் உற்பத்தி குறைந்துவிட்டதாகவும் தமிழ்நாட்டுத் தென்னை சாகுபடியாளருக்கு நல்ல லாபம் என்றும் கூறப்பட்டது. சில்லறை விலையில் ஒரு தேங்காய் 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பதற்குக் காரணம் கேட்டால், ஏற்றுமதி என்று பதில் வந்தது. ஆனால் தோப்பில் வாங்கப்படும் மட்டை உரிபடாத தேங்காய்க்கு 4 அல்லது நாலரை ரூபாய்க்கு மேல் தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படுவது இல்லை. உரிமட்டையும் உபரி லாபம். மரம் ஏறுபவர்களுக்கு லாபம் உண்டு. கூடை சுமப்பவர்களுக்கும் லாபம் உண்டு. தோப்பில் மலிவாக வாங்கப்பட்டு உரித்து விற்கும் கமிஷன் மண்டிக்கு லாபம் உண்டு. ஏற்றுமதி செய்பவருக்கு லாபம் உண்டு. மரத்தை நட்டு வளர்த்தவன் மேலே அண்ணாந்து பார்த்துக் குலை குலையாகத் தேங்காய் தொங்குவதைப் பார்த்து- உழைப்புக்கு ஏற்ற விலை இல்லையே என்று ஏங்கிப் பெருமூச்சு விடுவதைத் தவிர அவனால் வேறு என்னதான் செய்ய முடியும்?

ஏற்றுமதி பற்றி ஒரு புதிய செய்தி- உலகக் கடன்- நிதி நெருக்கடி காரணமாக ஜூலையிலிருந்து ஆகஸ்டு 2011 ஒரே மாதத்தில் 44 சதவீதம் குறைந்து நமது வர்த்தகப் பற்றாக்குறை 14 பில்லியன் டாலருக்கு உயர்ந்துவிட்டதால்- எவ்வளவு நஷ்டம் என்றாலும் வர்த்தகப் பற்றாக்குறையை ஈடுசெய்ய மதிப்புள்ள உணவை நஷ்டத்திற்கு ஏற்றுமதி செய்துதானே ஆக வேண்டும்!

**உணவுப் பஞ்சத்துக்கு வழிவகுக்கும் உர விலை உயர்வு!**

கே.விஜயபாஸ்கர்

First Published : 11 Oct 2011 06:14:48 AM IST



ஈரோடு: பெட்ரோலியப் பொருட்களைத் தொடர்ந்து உரங்கள் மீதான கட்டுப்பாடுகளையும் முழுமையாக விலக்கிக்கொள்ளும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது.

விவசாயத்தை இழப்பு இல்லாத தொழிலாக உருவாக்க ரசாயன உரங்களின் பயன்பாடு தவிர்க்க முடியாத சக்தியாக உள்ளது. உணவுப்பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்ட காலத்தில், உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கியது. குறிப்பிட்ட விலைக்கு மேல் உரங்களை விற்கக் கூடாது எனவும் கட்டுப்பாடு விதித்திருந்தது. இதனால் உரங்களின் விலை கட்டுக்குள் இருந்தது.

இந்நிலையில் உரங்களுக்கான மானியத்தை ரத்து செய்ய, மத்திய அரசு கடந்த 6 மாதங்களுக்கு முன்பு முடிவு செய்தது. இதன்பிறகு உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கும் மானியங்களை படிப்படியாக குறைத்துக்கொண்டது. இதன் காரணமாக 6 மாதங்களில் உரங்களின் விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது. பொட்டாஷ் உரம்

ரூ.290லிருந்து ரூ.450ஆகவும், டிஏபி ரூ.480லிருந்து ரூ.900மாகவும் உயர்ந்துள்ளது. கலப்பு உரம் ரூ.320லிருந்து ரூ.720ஆகவும் உயர்ந்துள்ளது. பல்வேறு பிரச்னைகளில் சிக்கித் தவிக்கும் விவசாயிகள், உரம் விலை உயர்வால் விவசாயத்தை கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது ஒருபுறமிருக்க பொட்டாஷ் உரம் கடந்த 6 மாதங்களாக கிடைப்பதில்லை.

கலப்பு உரம் தயாரிப்பதற்கு பொட்டாஷ் மிகவும் அவசியம். இந்த உரங்களை தயாரிக்கும் உள்ளூர் நிறுவனங்கள் பல இப்போதும் தினமும் 50 டன் வரை கலப்பு உரங்களை தயாரித்து விற்பனை செய்கின்றன. வெளிச்சந்தையில் விற்பனை இல்லாத நிலையில் பொட்டாஷ் உரத்தை உரிய அளவில் கலக்காமல், இந்த உர நிறுவனங்கள் கலப்பு உரங்களை தயாரிப்பதாகக் கூறப்படுகிறது. இதனை அண்மையில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்து, தமிழகம் முழுவதும் 26 தனியார் கலப்பு உரம் தயாரிக்கும் நிறுவனங்களை மூடினர். உரங்களின் மீதான கட்டுப்பட்டை, மத்திய அரசு விலக்கிக்கொண்டதன் விளைவாக, உரங்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வருகிறது. பெட்ரோலிய பொருட்களின் விலை நிர்ணய உரிமையை, நிறுவனங்களுக்கு

வழங்கிவிட்டதாகவும், விலை உயர்வுக்கு மத்திய அரசு காரணமல்ல என்றும் மத்திய நிதி அமைச்சர் அண்மையில் தெரிவித்தார். தற்போது, உர உற்பத்தி நிறுவனங்கள், விலையை நிர்ணயம் செய்துகொள்ளலாம் என்ற முடிவுக்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

உர தயாரிப்பு நிறுவனங்களே, உர விலையை நிர்ணயம் செய்யும் பட்சத்தில், பொட்டாஷ், டிஏபி போன்ற உரங்கள் மூட்டை ரூ.1000 க்கு மேல் உயர்ந்துவிடும். மக்களவைத் தேர்தலுக்கு முன்பு உர விலையை கட்டுக்குள் கொண்டு வருவதாக கூறி, உர மானியத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டு, புதிய விலையை நிர்ணயம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க செயலர் சுபி.தளபதி தெரிவித்தது:

உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது என்பதை பெரும்பாலான விவசாயிகள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. மற்ற பொருட்களின் விலையைப் போன்றே, உரம் விலையும் உயர்ந்துள்ளது என்றுதான் விவசாயிகள் கருதுவார்கள். தேர்தல் நேரத்தில் மானியத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டு, விலையை நிர்ணயிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. உர விலையை தயாரிப்பு நிறுவனங்களே நிர்ணயம் செய்துகொள்ளும் நிலை உருவாகும் பட்சத்தில் பெட்ரோல், தங்கம் போன்றவைகளின் விலையும் நாள்தோறும் உயரும் நிலை உருவாகும். உரங்கள் விலை உயரும் அதே வேளையில் விளை பொருட்களின் விலை மட்டும் குறைந்து கொண்டே வருகிறது. விவசாயிகள் மீது மத்திய அரசு மறைமுகமாக சுமைகளை ஏற்றி வருகிறது. இது அதிகரித்துக்கொண்டே செல்லும் பட்சத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிலரும், இத்தொழிலை விட்டுச் செல்லும் நிலை உருவாகும். இதன் விளைவு நாட்டில் உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்திவிடும் என்பதை மத்திய அரசு உணர வேண்டும் என்றார்.

**எண்டோசல்பான் பயன்பாடு குறித்த கள ஆய்வு**

First Published : 10 Oct 2011 12:15:53 PM IST

புதுக்கோட்டை, அக். 9: புதுக்கோட்டை அருகே வடவாளம் ஊராட்சியைச் சேர்ந்த தெற்குசெட்டியாபட்டி கிராமத்தில் எண்டோசல்பான் பூச்சி மருந்தின் பயன்பாடு குறித்த கள ஆய்வு அண்மையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் வளர்ச்சி ஆய்வு மையத்தினர் இந்தக் கள ஆய்வை நடத்தினர். இதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலகத்தில் நடைபெற்ற

மாநிலப் பயிற்சி முகாமுக்கு அமைப்பின் மாவட்டத் தலைவர் எல். பிரபாகரன் தலைமை வகித்தார்.

மாநிலப் பொதுச் செயலர் எம்.எஸ். ஸ்டீபன்நாதன் முகாமைத் தொடங்கி வைத்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பொருளியல் துறைப் பேராசிரியர் நாராயணமூர்த்தி, மாநிலத் துணைத் தலைவர் எஸ்.டி. பாலகிருஷ்ணன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் சி. கோவிந்தசாமி, மாவட்டத் துணைத் தலைவர்கள் அ. மணவாளன், பொன். கருப்பையா, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் டி. சிவராமகிருஷ்ணன், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார், கல்பாக்கம் அணுமின் நிலைய விஞ்ஞானி ம. ஜெயவேல் ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து, கண்டியாநத்தம், நெருஞ்சிப்பட்டி ஆகிய கிராமங்களில் பல்லுயிர் பெருக்கம் குறித்த ஆய்வில் பங்கேற்ற மாமன்னர் கல்லூரி ஆய்வு மாணவர்கள் தனலெட்சுமி, பாலமுருகன், ராமநாதன், பாக்கிராஜ், சரோஜா, நீலா, சித்ரா ஆகியோருக்கு சான்றிதழ் அளிக்கப்பட்டது. முன்னதாக, அமைப்பின் மாவட்டச் செயலர் க. ஜெயபாலன் வரவேற்றார். மாவட்டப் பொருளாளர் எம். வீரமுத்து நன்றி கூறினார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**குறைந்து வரும் நிலத்தடி நீர் மட்டம்; நெருக்கடியில் நெற்களஞ்சியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2011,23:16 IST

மாற்றம் செய்த நாள் : அக்டோபர் 11,2011,01:22 IST




விவசாயத்திற்குப் பெயர் பெற்ற தஞ்சை மாவட்டத்தில், கடந்த 10 ஆண்டுகளில், நிலத்தடி நீர் மட்டம் 42 அடி குறைந்துள்ளது. அதைத் தொடர்ந்து, இரண்டே ஆண்டுகளில், தரிசு நிலங்கள் 40 சதவீதம் அதிகரித்துள்ளன. இந்த அபாயப் புள்ளி விவரங்கள், தஞ்சை மாவட்ட விவசாயத்தில் ஏற்பட்டு வரும் விரும்பத்தகாத மாற்றங்களின் சில அறிகுறிகள் தான்.

தண்ணீர் கரை புரண்டோடும் காவிரி நதி நீர் கால்வாய்கள், அவற்றில் குளித்துக் கும்மாளம் போடும் பிள்ளைகள், கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் எனக் காட்சி தரும் வயல்வெளிகள், வயல்வெளிச் சேற்றில் நாற்று நடும் பெண்கள் என, நெஞ்சை அள்ளும் தஞ்சை கிராமங்கள், வளமை போல் இந்த ஆண்டும், சம்பா பருவ நெல் சாகுபடிக்குத் தயாராகி வருகின்றன.அடுத்த ஐந்து ஆண்டுகளில், இதே காட்சிகள் கிடைக்குமா என்ற கேள்வியை, புள்ளி விவரங்கள் பின்னால் சென்ற போது சந்தித்த அசுரர்கள் எழுப்புகின்றனர்.

**ஆழ்துளைக் கிணறு என்ற அசுரன்:**

மத்திய நீர்வள அமைச்சகம், தஞ்சை மாவட்டத்தில், 26 இடங்களில், 2001-2011 ஆண்டுகளுக்கு இடையே ஏற்பட்டிருக்கும் நிலத்தடி நீர் மாற்றங்கள் குறித்த ஆய்வை மேற்கொண்டது. அதில், நிலத்தடி நீர் மட்டம், சராசரியாக 13.87 மீட்டர், அதாவது 45.5 அடி அளவிற்குக் குறைந்துள்ளது தெரியவந்தது.குறிப்பாக, தஞ்சையின் தெற்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளில், மருங்குளம், குறுங்குளம், திருவோணம், திருச்சிற்றம்பலம் உள்ளிட்ட கிராமங்களில், 70 அடியாக இருந்த நிலத்தடி நீர் மட்டம், 120 அடிக்கு குறைந்துள்ளது. இதை, பொதுப் பணித் துறை அதிகாரிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.மேட்டூர் அணை நீர்வரத்து மற்றும் பருவ மழையில் நிலவும் மாறுபாடு, பயிர் சுழற்சி முறை கடைபிடிக்கப்படாதது ஆகியவற்றின் விளைவாக, ஆழ்துளைக் கிணற்றுப் பாசனம் அதிகரித்துள்ளது.இதன் நேரடி விளைவாக, நிலத்தடி நீரும் வேகமாகக் குறைந்து வருகிறது. இதற்கும் மேல் நிலத்தடி நீர் குறைந்தால், நிலைமை, அபாய கட்டத்தை எட்டும் எனத் தெரிகிறது.

நீடாமங்கலத்தை அடுத்த, பைத்தஞ்சேரியைச் சேர்ந்த விவசாயி குமாரசாமி, ""மேட்டூரை மட்டும் நம்பி, விவசாயம் செய்த காலம் மாறிவிட்டது. கடந்த 15 ஆண்டுகளுக்கு மேல், எங்கள் பகுதியில் ஆழ்துளைக் கிணற்றுப் பாசனம் நடந்து வருகிறது. எங்கள் கிராமத்தில் மட்டும், 22 ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. இவற்றின் மூலம், விவசாயத்திற்கு நீரை எடுக்க, எடுக்க, நிலத்தடி நீர் மட்டம் நிச்சயம் குறையும்'' எனத் தெரிவித்தார். மேலும், ""இந்நிலை தொடர்ந்தால், எதிர்காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் கேள்விக்குறியாகும் அபாயம் உள்ளது. அதன் அறிகுறியாக, இப்போதே எங்கள் பகுதியில், தண்ணீர் லேசாக உவர்க்கிறது'' என்றார்.

**ஊடு பயிர்களை"ஊடு' கட்டிய அசுரன் யார்?**

தாளடி, சம்பா நெல் சாகுபடிக்குப் பின், உளுந்து, நிலக்கடலை, பச்சைப்பயறு போன்ற ஊடு பயிர்களைப் போடும் முறை, தஞ்சையில் மெல்ல மெல்ல மறைந்து வருகிறது.இந்தப் பயிர்களில் உள்ள வேர் முடிச்சுகள், இயற்கையாக அமோனியா உரம் தயார் செய்து மண்ணை

வளமாக்குகின்றன. மேலும், இந்த வேர்கள் ஆழமாகப் பரவும் தன்மை கொண்டவை என்பதால், மண்ணை மென்மையாக்குகின்றன. இதனால், மண்ணின் மேற்பரப்பு, மழைநீரை உள்வாங்கும் பக்குவத்திற்குத் தயாராகிறது.ஆனால், தற்போது, தஞ்சை விவசாயிகள் ஊடு பயிர்களை புறக்கணித்து விட்டு, நெல் பயிரை மட்டுமே விதைத்து வருகின்றனர்.

**இதுகுறித்து, தொப்பன்குடிசையைச் சேர்ந்த, இயற்கை முறை விவசாயி சித்தர்**, ""ஆழ்துளைக் கிணற்றுப் பாசன முறையால் குறையும் நிலத்தடி நீரை, பயிர் சுழற்சி முறையால் எளிமையாக ஈடுசெய்யலாம். ஆனால், தற்போது பெரும்பாலான விவசாயிகள், ஆண்டு முழுவதும் நெல் பயிரை மட்டுமே விதைக்கின்றனர்" எனக் கூறினார்.
மேலும், ""இதற்கு இடப்படும் ரசாயன உரங்களும், தன் பங்கிற்கு மண்ணை இறுகச் செய்கின்றன. இதனால், மழைநீர் உறிஞ்சப்படாமல், வீணாகக் கடலில் கலப்பதுடன், நிலத்தின் வளமான மேற்பரப்பு மண்ணும், அடித்துச் செல்லப்படும் அவலம் ஏற்படுகிறது" என்றார்.

**ஆட்களை மாயமாக்கிய அசுரன்:**
விவசாய வேலைக்கு ஆள் கிடைப்பது, குதிரைக் கொம்பைப் பிடிப்பது போன்ற விஷயமாக தஞ்சையில் மாறிவிட்டதால், தற்போது பெரும்பாலும் இயந்திரங்களே பயன்படுத்தப்படுகின்றன. இயந்திர அறுவடையால், பயிர் சுழற்சி முறையை செயல்படுத்துவதில், நிறைய நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதாக விவசாயிகள் கருதுகின்றனர்.

**புன்னைநல்லூர் அடுத்த, மாரியம்மன் கோவில் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி மனோகரன்,** ""தாளடி, சம்பா நெல் அறுவடைக்கு ஒரு வாரம் முன்பே, அதாவது தை முதல் வாரத்தில், வயலின் ஈரப்பதம், ஊடுபயிர் விதைகளை விதைப்பதற்கு ஏற்றதாக இருக்கும். அப்போதே வயலில் பட்டம் பிரித்து, ஊடு பயிர்களுக்கான விதைகளை விதைப்போம்.ஆனால், இயந்திரத்தை வைத்து அறுவடை செய்வதால், வயலை முழுவதும் காயவைத்த பின்தான், இயந்திரத்தைக் கொண்டு அறுவடை செய்ய இயலும். இதனால், ஊடு பயிர்களுக்கான விதைகளை, குறித்த நேரத்தில் விதைக்க முடிவதில்லை. அப்படி விதைத்தாலும், அறுவடை இயந்திரம் அவற்றை நசுக்கிவிடும்" என்றார்.

**தரிசாகும் விவசாய நிலங்கள்:**
ஆள், நீர் பற்றாக்குறையால், தஞ்சையில் 2007-08ம் ஆண்டு 10,145 எக்டேராக இருந்த தரிசு நிலங்கள், 2009-10ம் ஆண்டில் 14,229 எக்டேராக அதிகரித்தது. அதாவது, இரண்டு ஆண்டுகளில், தரிசு நிலங்களின் அளவு, 40 சதவீதம் அதிகரித்துள்ளது.

**இது குறித்து, தஞ்சை, காட்டுப்பாக்கம் வேளாண் இணை இயக்குனர் அலுவலக அதிகாரி கூறுகையில்**, ""இன்றைய இளம் தலைமுறையினர், விவசாயம் செய்ய விரும்பவில்லை. பாரம்பரியமாக விவசாயம் செய்வோர் கூட, தங்கள் பிள்ளைகள் சில ஆண்டுகளாவது வெளிநாடு சென்று சம்பாதிப்பதையே விரும்புகின்றனர். இதனால், விவசாயத்திற்குப் பெயர் பெற்ற தஞ்சை மாவட்டத்திலும், தரிசு நிலங்கள் அதிகரித்து வருகின்றன. இவை, நாளடைவில் வீட்டுமனைகளாக மாறிவிடுகின்றன" என்றார்.மேலும், ""தரிசாகும் விளைநிலங்களால் ஏற்படும் உற்பத்திப் பாதிப்பைச் சரிசெய்ய, நவீன நெல் விதை ரகங்களை, விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கிறோம். இவற்றால், 15 ஆண்டுகளுக்கு முன், 4,000 கிலோ நெல் அறுவடை செய்யப்பட்ட ஒரு எக்டேர் பரப்பளவில், தற்போது, 6,500 கிலோ முதல் 7,000 கிலோ வரை, அறுவடை செய்ய முடிகிறது" என தெரிவித்தார்.
உயர் ரக விதைகளுக்கு, கூடுதல் உரங்களும், பயிர் ஊக்கிகளும் தேவைப்படுகின்றன. இதுவே ஒரு முடியாத வட்டமாக, கூடுதல் உரம், உரத்தினால் மண் இறுக்கம், அதனால் நிலத்தடி நீர் குறைவு என்ற போக்கில், விவசாயத்தை நலிவடையச் செய்யும்.

**அசுரர்களை விரட்டுவது தான் எப்படி?**

சில அரசுத் திட்டங்களே, விவசாயத்திற்குப் பாதகமாக உள்ளன. குறிப்பாக, நீலத்தடி நீரைப் பாழாக்கும் இலவச மின்சாரம், வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல் செய்யும் 100 நாள் வேலை திட்டம், விவசாயிகளை சந்தையில் இருந்து விலக்கும், கொள்முதல் விலை நிர்ணயம்.

**இதுகுறித்து, இயற்கை விவசாயி சித்தர்**, ""குழந்தைக்கு பொம்மை வாங்கிக் கொடுத்துவிட்டு, அதன் காது கடுக்கனைக் கழற்றுவதைப் போல, விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்துவிட்டு, விளை பொருட்களுக்கு அரசே விலை நிர்ணயம் செய்கிறது. இந்த அணுகுமுறை தவறானது. விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமையை, விவசாயிகளுக்கே வழங்க வேண்டும்" என்று கூறினார்.

தொடர்ந்து, பசுமையான தஞ்சையின், நெஞ்சை அள்ளும் காட்சிகளைப் பார்க்க வேண்டும் என்றால், மேட்டூர் அணைப் பாசனத்தைச் சீர் செய்து, புள்ளி விவரங்களுக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் அசுரர்களையும் விரட்ட வேண்டும்.

**தஞ்சை மாவட்டம்:**

தஞ்சை மாவட்டத்தில், தஞ்சை, பூதலூர், திருவையாறு, ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, மதுக்கூர், பேராவூரணி, சேதுவாசத்திரம், அம்மாபேட்டை, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய விவசாய வட்டங்கள்

உள்ளன.இவற்றில், ஒரு லட்சத்து 80 ஆயிரம் எக்டேர் பரப்பளவில், தற்போது விவசாயம் நடக்கிறது.

**தொழிற்துறைக்கும் ஆளில்லை: வர்த்தக கூட்டமைப்பு காட்டம்**

"குறைவான வேலைப்பளு மற்றும் அதிக சம்பளம் காரணமாக, பெருமளவு தொழிலாளர்கள், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் நோக்கி ஈர்க்கப்படுவதால், இதர தொழில்துறைகளில் ஆள்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது' என, இந்திய வர்த்தக கூட்டமைப்பு கவலை தெரிவித்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் விளைவுகள் குறித்து, இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு சமீபத்தில் ஆய்வு நடத்தியது.

ஆய்வில் பங்கேற்ற பெருமளவு நிறுவனங்கள், "தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் குறைவான வேலைப்பளுவுடன் அதிக சம்பளம் வழங்கப்படுவதால், கனரக தொழிற்சாலைப் பணிகளில் ஈடுபட தொழிலாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால், தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டு, ஒப்பந்தப் பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்ற முடியாத சூழல் நிலவுகிறது. இதில், நாட்டின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதி மாநிலங்களைச் சேர்ந்த நிறுவனங்கள் தான், பெருமளவு பாதிக்கப்படுகின்றன' என தெரிவித்தன.

இந்நிலை மேலும் தொடர்ந்தால், நாடு முழுவதும் திறன் வாய்ந்த பணியாளர்கள் மற்றும் சாதாரண தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும். இந்த நிலையை சரிசெய்ய, கனரக தொழிற்சாலைப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களையும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளலாம் என்ற கோரிக்கையையும், அவை முன்வைத்தன.
விவசாயம் சார்ந்த தொழில்களும், இனி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படும் என, மத்திய அமைச்சர் சரத் பவார் அறிவித்துள்ளார்.எனவே, இதுபோன்ற உபயோகமான துறைகளிலும், இத்திட்டத்தின் தொழிலாளர்களை ஈடுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**குறைந்து வரும் மேட்டூர் நீர்**

தஞ்சையின் முக்கிய பயிரான நெல், குறுவை, தாளடி, சம்பா என, மூன்று பருவங்களில் பயிரிடப்படுகிறது.இதில், ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான குறுவை நெல் சாகுபடிக்கு, இம்மாவட்ட விவசாயிகள் மேட்டூர் அணை நீரையே பெரிதும் நம்பியுள்ளனர்.கடந்த 20 ஆண்டுகளில், 12 ஆண்டுகள், தஞ்சை உட்பட 12 மேட்டூர் அணை பாசன மாவட்டங்களுக்கு, குறுவை நெல் சாகுபடிக்கு பரிந்துரைக்கப்பட்ட 137 டி.எம்.சி., தண்ணீரை விட, குறைவாகவே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கிடைத்துள்ளது. தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுனர்

பேரவையைச் சேர்ந்த, கலைவாணன், ""கடந்த நிதியாண்டில், இப்பருவத்தில், மேட்டூர் அணை பாசனப் பகுதிகளுக்கு, பரிந்துரைக்கப்பட்ட தண்ணீர் அளவை விட, 50 சதவீதம் குறைவாகத் தான் கிடைத்தது.இதனால், குறுவை நெல் சாகுபடிக்கு, ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை எடுக்கும் அவசியம் ஏற்படுகிறது" என்றார்.

**பருவ மழையும், சம்பா சாகுபடியும்**

தஞ்சை மாவட்டத்தில், சம்பா பருவத்தில் தான், அதிகளவு நெல் பயிரிடப்படுகிறது. கடந்த நிதியாண்டில், ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 459 எக்டேர் பரப்பளவில், சம்பா நெல் பயிரிடப்பட்டது.ஆகஸ்ட் முதல் ஜனவரி வரையிலான இப்பருவத்தில், வட கிழக்குப் பருவ மழை பெய்வதால், இம்மழை நீரைக் கொண்டு, பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள கண்மாய்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் மூலம் பாசனத்திற்குத் தேவையான நீர் கிடைத்து வருகிறது.இந்த காலகட்டத்தில், கடந்த நிதியாண்டில் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட, 60.87 டி.எம்.சி., தண்ணீர் குறைவாகவே மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்டாலும், விவசாயம் பாதிக்கப்படவில்லை.- என்.கிரிதரன் -

**பகண்டை கிராம விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2011,01:27 IST

விழுப்புரம் : விழுப்புரம் அடுத்த பகண்டை கிராமத்தில் கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். நெல், மணிலா, உளுந்து போன்ற பயிர் சாகுபடி செய்வதில் ஆள் பற்றாக்குறை மற்றும் கூடுதல் செலவு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்போது கரும்பு சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். மற்ற பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வங்கிகள் போதிய கடன் கொடுக்க முன் வருவதில்லை. ஆனால் கரும்பு சாகுபடி செய்ய வங்கிகளும், கூட்டுறவு சங்கங்களும் தாராளமாக கடன் வழங்குகின்றன.

கரும்பு பயிர் சாகுபடிக்கு முதலாமாண்டு மட்டுமே அதிக ஆட்களும், செலவும் ஏற்படும். அடுத்து வரும் மருதாம்பு கரும்பு சாகுபடிக்கு ஆட்கள் தேவை மற்றும் செலவு மிகவும் குறைவு. குறிப்பாக நெல், மணிலா மற்றும் உளுந்து சாகுபடி செய்து வந்த விழுப்புரம் அடுத்த பகண்டை கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் தற்போது கரும்பு பயிர் செய்துள்ளனர். அவ்வப்போது விலை ஏற்றம், இறக்கம் இல்லாமல் அரசு நிர்ணயிக்கும் விலைக்கு கரும்பை, ஆலை நிர்வாகம் கொள்முதல் செய்து கொள்வதால் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்ய அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

**நெல் கொள்முதல் விலை உயர்த்தித்தர கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2011,02:08 IST

சேலம் : நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென, தமிழ்நாடு கள் இயக்கம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.சேலம் நான்கு ரோட்டில், தமிழ்நாடு கள் இயக்க கள ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது.கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி நிருபர்களிடம் கூறியதாவது: கொள்கை முடிவு எடுக்காத உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடத்தப்படும் தேர்தலில், அரசியல் கட்சிகளின் தலையீடு, குறுக்கீடு, சின்னம் ஒதுக்கீடு ஆகியவை இருக்கக் கூடாது.மோட்டா ரக நெல்லுக்கு கொள்முதல் விலை, 1,050 ரூபாயில் இருந்து, 1,100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சன்ன ரக நெல்லுக்கு கொள்முதல் விலை, 1.100 ரூபாயில் இருந்து, 1,170 வரை உயர்த்தப்பட்டுள்ளது.தற்போது, நெல் சாகுபடிக்கான செலவு, 20 சதவீதம் உயர்ந்துள்ளது. உரம், பெட்ரோல் ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளது. எனவே, கொள்முதல் விலையை, 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். கடந்த தேர்தல் பிரச்சாரத்தில், கள்ளுக்கான தடை நீக்கப்படும் என்று அ.தி.மு.க., அரசு தெரிவித்தது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.பனை அழிக்கப்படுவதை தடுக்க, தமிழகம் முழுவதும், 2012ம் ஆண்டு, தமிழ்நாடு கள் இயக்கம் சார்பில், விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட உள்ளது.இவ்வாறு கூறினார்.

**கொண்டைக் கடலை விலை சரிவு பதுக்கல் வியாபாரிகளுக்கு "ஆப்பு'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2011,02:09 IST

சேலம்: சரஸ்வதி பூஜை, விஜயதசமி பண்டிகைகளை முன்னிட்டு விலை உயர்வை சந்தித்த கொண்டைக் கடலையின் விலை, குவிண்டாலுக்கு, 600 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டு இருப்பது பதுக்கல் வியாபாரிகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.கொண்டைக் கடலை விலை சரிவை அடுத்து, அதன் மூலப் பொருளாக கொண்டு தயார் செய்யப்படும் பொரி கடலை, கடலை மாவு உள்ளிட்ட அனைத்து வகையான பொருட்களின் விலையிலும் கிலோவுக்கு, 6 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது.சரஸ்வதி பூஜை, விஜயதசமி பண்டிகை காரணமாக கடந்த வாரம் மார்க்கெட்டில் கொண்டைக் கடலையின் விலை, குவிண்டாலுக்கு,1,000 ரூபாய் திடீர் உயர்வு ஏற்பட்டது. இந்த உயர்வு கடலை மாவு, கடலை பருப்பு, பொரிகடலை ஆகியவற்றிலும் எதிரொலித்தது.கடந்த வாரம் வரை வெள்ளை கொண்டைக் கடலை மொத்த விலையில் குவிண்டால், 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது, 600 ரூபாய் சரிவு ஏற்பட்டு கிலோ, 9, 400 ரூபாய்க்கு விற்றது.

சிகப்பு கொண்டக் கடலை, 5, 800 ரூபாய்க்கு விற்றது, 600 ரூபாய் சரிவு ஏற்பட்டு, குவிண்டால், 5, 200 ரூபாய்க்கு விற்கிறது. மொத்த விலையில் சரிவை அடுத்து சில்லரை விலையில் வெள்ளை கொண்டக் கடலை கிலோ, 104 ரூபாய்க்கு விற்றதில் நான்கு ரூபாய் குறைந்து, 96 ரூபாய்க்கு விற்கிறது. சிகப்பு கொண்டக் கடலை, 54 ரூபாய்க்கு விற்றது, 6 ரூபாய் குறைந்து, கிலோ, 48 ரூபாய்க்கு விற்கிறது.இந்த விலை சரிவை அடுத்து, கொண்டக் கடலையை மூலப் பொருளாக கொண்டு தயார் செய்யப்படும், கடலை மாவு, பொரி கடலை, கடலை பருப்பு ஆகியவற்றின் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

பொரி கடலை மொத்த விலை, 54 கிலோ எடை கொண்ட மூட்டை, 3, 400 ரூபாய்க்கு விற்றது, 600 ரூபாய் சரிந்து, மூட்டை, 2, 800 ரூபாய்க்கு விற்கிறது. அதை அடுத்து சில்லரை விலையில் கிலோ, 70 ரூபாய்க்கு விற்றது, 63 ரூபாயாக குறைந்துள்ளது.கடலை மாவு மொத்த விலையில், 50 கிலோ எடை கொண்ட மூட்டை, 3, 300 ரூபாய்க்கு விற்றது, 600 ரூபாய் சரிந்து, 2, 700 ரூபாய்க்கு விற்கிறது.

மொத்த விலையில் ஏற்பட்ட சரிவை அடுத்து சில்லரை விலையில் கிலோ, 70 ரூபாய்க்கு விற்றது, 63 ரூபாய்க்கு விற்கிறது.கடலை மாவு, பொரி கடலையின் விலை சரிவை அடுத்து கடலை பருப்பின் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடலை பருப்பு குவின்டால், 5, 600 ரூபாய்க்கு விற்றது, 800 ரூபாய் குறைந்து, 4, 800 ரூபாய்க்கு விற்கிறது. சில்லரை விலையில் கிலோ, 58 ரூபாய்க்கு விற்றது, 50 ரூபாயாக குறைந்துள்ளது.சேலம் செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த கணேசன் கூறியதாவது:தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பெரிய வியாபாரிகள் அதிக அளவில் கொண்டக் கடலையை பதுக்கி செயற்கையான விலை உயர்வை ஏற்படுத்தினர்.

இதன் காரணமாக மார்க்கெட்டில் விலை உயர்வை எதிர்பார்த்து அதிக அளவில் கொண்டக் கடலையை நடுத்தர வியாபாரிகளும் ஸ்டாக் வைக்க துவங்கினர்.தற்போது அதிக அளவில் மார்க்கெட்டுக்கு கொண்டக் கடலை விற்பனைக்கு வரத் துவங்கி உள்ளதால் இதனால், ஒரே வாரத்தில் இதன் விலையில் குவிண்டாலுக்கு, 600 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டது. இந்த சரிவு நடுத்தர மற்றும் சிறிய வியாபாரிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என்றார்.

**விலை சரிந்தது; வாழை விவசாயிகள் வாட்டம்!**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2011,22:25 IST

அன்னூர் : நேந்திரன் வாழைத்தார் விலை ஒரே மாதத்தில் பாதிக்கும் கீழாக குறைந்ததால், விவசாயிகள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.கோவை மாவட்டத்தில், கோவில்பாளையம், அன்னூர், சிறுமுகை, காரமடை, பெரியநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் நேந்திரன், கதளி ரக வாழை பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் வாழைத்தார்களில் 90 சதவீதம், கேரளாவில் கோழிக்கோடு, கொல்லம், கொட்டாரக்கரா உள்ளிட்ட ஊர்களுக்கும், மும்பைக்கும் அனுப்பப்படுகிறது; அரபு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் வாழைத்தார் வெட்டும் சீசன் துவங்கி, பிப்ரவரியில் முடிகிறது. இந்த ஆண்டு சீசன் துவக்கத்தில் ஒரு கிலோ நேந்திரன் 35 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கினர். இப்போது 12 ரூபாய்க்கு கேட்கின்றனர்.வாழை விவசாயிகள் கூறியதாவது:வழக்கமாக கேரளா மற்றும் உள்ளூர் வியாபாரிகள் தோட்டங்களுக்கு வந்து விலை பேசி, வெட்டி எடுத்து செல்கின்றனர். கடந்த மாதம் சீசன் துவங்கிய போது ஒரு கிலோ நேந்திரன் 35 ரூபாய்க்கு வாங்கினர். இந்த "ரேட்' படிப்படியாக குறையத் தொடங்கியது. இப்போது ஒரு கிலோ வெறும் 12 ரூபாய்க்கு கேட்கின்றனர். கடந்த ஆண்டு இதே வாரத்தில் ஒரு கிலோ 18 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கினர். வாழைத்தார் வெட்டுவது இன்னும் உச்சத்தை எட்டவில்லை. இப்போதே விலை 12 ரூபாய்க்கு குறைந்து விட்டது. வரும் வாரங்களில் வாழைத்தார் வெட்டுவதும், வரத்தும் அதிகரிக்கும். இன்னும் விலை குறையும் வாய்ப்பு உள்ளது.ஒரு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, 11 மாதங்கள் தண்ணீர் கட்டி, உரம் போட்டு, மருந்து அடித்து, காற்றில் விழாமல், வேலை செய்தபின் இப்போது மிக குறைந்த விலை தான் கிடைக்கிறது. இதனால் வாழை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.இவ்வாறு வாழை விவசாயிகள் தெரிவித்தனர்.வாழைத்தார் மொத்த வியாபாரிகள் கூறுகையில்,""இந்த ஆண்டு வாழைத் தார் வரத்து அதிகரித்து விட்டது. கேரளாவிலும் வாழை அதிக பரப்பளவில் பயிரிட்டுள்ளதால் அங்கு தேவை குறைந்து விட்டது. இங்கிருந்து கொள்முதல் செய்து, போக்குவரத்து செலவு செய்து, கொண்டு போவதைவிட அங்கு விலை குறைவு. ஆனாலும் வரும் வாரங்களில் சற்று விலை கூட வாய்ப்புள்ளது. கதளி ரக வாழைக்கு 23 ரூபாய் விலை கிடைக்கிறது," என்றனர்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,860-2,900

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
3,550-3,600

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,300-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,650-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 1,885-00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புலிகேசவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரி உள்பட) 10,500-00
டின் (15 கிலோ) 1,750-00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
10,000.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,980-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,585.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,100.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 520-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை, அக்.10-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,600 | 98.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 5,800 | 60.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 5,200 | 54.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,100 | 64.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,400 | 78.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3,900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4,500 | 48.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 3,200 | 62.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,400 | 56.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 4,800 | 51.00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, அக்.10-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | வி.797 22எம்.எம் | ரூ. | 7,311 |
| 2. | ஜெயதார் (கர்நாடகா) | ரூ. | 8,717 |
| 3. | ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 10,715 |
| 4. | எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 10,264 |
| 5. | சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 11,248 |
| 6. | எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 11,248 |
| 7. | டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 15,044 |

## கோவை உழவர் சந்தை

கோவை, அக்.10-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 50-55 | காலிப்பிளவர் | ரூ. | 18-22 |
| கத்தரிக்காய் | ரூ. | 10-12 | பொறியல் தட்டை | ரூ. | 14-20 |
| வெண்டைக்காய் | ரூ. | 18-20 | தேங்காய் | ரூ. | 7-14 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 12-13 | பட்டாணி | ரூ. | 80-100 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 18-20 | கறிவேப்பிலை | ரூ. | 12-00 |
| புடலை | ரூ. | 13-18 | பூண்டு | ரூ. | 100-130 |
| பீர்க்கன்காய் | ரூ. | 14-18 | அகத்தி | ரூ. | 16-00 |
| சுரைக்காய் | ரூ. | 8-12 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| பாகற்காய் | ரூ. | 14-16 | குடைமிளகாய் | ரூ. | 30-34 |
| கொத்தவரை | ரூ. | 18-20 | சாதா பீன்ஸ் | ரூ. | 18-30 |
| பூசணிக்காய் | ரூ. | 8-10 | டபுள்பீன்ஸ் | ரூ. | 40-50 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-10 | கறிபீன்ஸ் | ரூ. | 18-30 |
| மேரக்காய் | ரூ. | 12-14 | புஸ்பீன்ஸ் | ரூ. | 40-42 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12-13 | காளான் | ரூ. | 80-140 |
| குண்டு மிளகாய் | ரூ. | 17-18 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-14 |
| சின்னவெங்காயம் | ரூ. | 18-23 | மாங்காய் | ரூ. | 30-35 |
| பெரியவெங்காயம் | ரூ. | 15-16 | திராட்சை | ரூ. | 38-00 |
| இஞ்சி | ரூ. | 20-40 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 20-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-26 | கொய்யா1கிலோ | ரூ. | 20-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16-18 | மாதுளை1கிலோ | ரூ. | 120-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 18-22 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 10-14 |
| கருணைகிழங்கு | ரூ. | 28-00 | வரமிளகாய் | ரூ. | 100-130 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 20-00 | மாம்பழம் | ரூ. | 60-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-15 | ஆப்பிள் | ரூ. | 100-130 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-15 | சாத்துக்குடி | ரூ. | 22-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18-00 | நெல்லிக்காய் | ரூ. | 30-34 |
| முள்ளங்கி | ரூ. | 10-14 | ஆரஞ்சு | ரூ. | 30-40 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 35-42 | வெள்ளரி | ரூ. | 12-14 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12-20 | புளி 1 கிலோ | ரூ. | 100-120 |
| நூல்கோல் | ரூ. | 18-22 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30-34 |
| கொத்துமல்லி | ரூ. | 30-00 | அவரை | ரூ. | 14-18 |
| ட்ரின்பீன்ஸ் | ரூ. | 18-22 | நிலக்கடலை | ரூ. | 28-30 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-14 | மக்காச்சோளம் | ரூ. | 12-20 |
| கலர்கோஸ் | ரூ. | 18-20 | | | |
| புதினா | ரூ. | 16-00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 31,000 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 31,300 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 32,300 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 14,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 14,500 |
| சுக்கு (புதியது) | ரூ. 12,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 7,900 |
| கொப்பரை நாடன் | ரூ. 5,000 |
| கொப்பரை ராசு | ரூ. 4,900 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 5,100 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 8,100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7,250 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20,500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20,800 |
| ரப்பர் பால் | ரூ. 15,200 |
| காப்பி | ரூ. 10,500 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3,100 |
| நேந்திரகாய் | ரூ. 1250 |
| இஞ்சி | ரூ. 500 |

## எண்ணை மார்க்கெட்

கோவை, அக்.10-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,690 | 110.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,220 | 75.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1270 | 82.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1240 | 80.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,560 | 100.00 |
| வனஸ்பதி | | |
| விவ்வி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1030 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.190.00 | அதிகபட்சவிலை | ரூ.270.00 |
| சராசரி விலை | ரூ.167.37 | சராசரி விலை | ரூ.241.55 |
| குறைந்தபட்சவிலை | ரூ.150.00 | குறைந்தபட்சவிலை | ரூ.210.00 |

**பட்டு நூல் ரூ.1,646**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 19,920.00 | 19,920.00 | 20,000.00 |
| ஒரு கிராம் | 2,490.00 | 2,490.00 | 2,500.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 52,670.00 | 56,350.00 | 56,500.00 |
| ஒரு கிராம் | 56.35 | 56.35 | 56.50 |